கிராமின்கிருஷிம **aus சம்**சேவா
இந்தியா வானிலை ஆய்வுதுறை
சோதனைதொகுதிநிலைஅக்ரோமெட்ஆலோசனை புல்லட்டின்

# அக்ரோமெட்ஆலோசனைபுல்லட்டின்

தேதி:**08-10-2021**

## ராமநாதபுரம்(தமிழ்நாடு)மாவட்ட வானிலைமுன்னறிவிப்பு-அன்று வெளியிடப்பட்ட :2021-10-08 ( அடுத்த 5 நாட்களில்8:30 IST வரைசெல்லுபடியாகும்

| **மாவட்டம் : இராமநாதபுரம்** | | | | | |
|---|---|---|---|---|---|
| **09.10.2021 to 13.10.2021** | 09.10.2021 | 10.10.2021 | 11.10.2021 | 12.10.2021 | 13.10.2021 |
| மழைஅளவு[மிமீ] | 3 | 3 | 6 | 8 | 2 |
| டிமாக்ஸ்$^{o}$C | 33 | 33 | 33 | 33 | 33 |
| டிமின்$^{o}$C | 27 | 27 | 27 | 27 | 27 |
| மேகக்கணி(ஆக்டா) | 7 | 7 | 8 | 8 | 7 |
| RH I | 90 | 90 | 90 | 90 | 90 |
| RH II | 55 | 55 | 55 | 55 | 55 |
| காற்றின் வேகம் (கிமீ) | 10 | 10 | 10 | 10 | 10 |
| காற்று இயக்கம் (பட்டம்) | 200 | 200 | 230 | 230 | 250 |

வானிலை**சுருக்கம்/ எச்சரிக்கை**

அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை பொழிய வாய்ப்ப்பு உள்ளது . வானம் மிதமான மேக மூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலைஆனது 33 செல்சியஸ் ஆகவும் குறைந்த பட்ச வெப்பநிலைஆனது 27 செல்சியஸ் ஆக பதிவாகலாம். மணிக்கு 10 கி.மீ வேகத்தில் காற்று தென் திசையில் இருந்து வீசக்கூடும்

பொது**ஆலோசனை**

. கால்நடைகளில் புறஒட்டுண்ணியின் தாக்கம் அதிகமாக காணப்படுவதால் இதனை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி நீக்க மருந்து சைபர்மெத்திரின் 1% கொண்டு தூய்மைப்படுத்தலாம்.

எஸ்எம்எஸ் ஆலோசனை

மானாவாரி விவசாயிகள் நெல் சாகுபடியை மேற்கொள்ளும் பட்சத்தில் வறட்சியை தாங்கி வளரும் அண்ணா 4, Co 51, ADT 45 மற்றும் CO53 போன்ற ரகங்களை விதைத்து பயன்பெறலாம்.

**பயிர்குறிப்பிட்ட ஆலோசனை:**

| **பயிர்** | **ஆலோசனை:** |
|---|---|
| நெல் | மானாவாரி விவசாயிகள் தரமான விதைகளை விதைப்பதற்கு ஒரு நாள் முன்பாக ஒரு சதவிகித பொட்டாசியம் குளோரைடு கரைசலில் 6 மணி நேரம் ஊற வைத்து பின் நிழலில் 16 மணி நேரம் உலரவிட்டு விதைப்பை மேற்கொள்ளும் பொழுது விதை கடினத் தன்மையுடன் போதுமான ஈரம் மண்ணில் கிடைத்த பின்பு முளைத்து வளரும் தன்மையை பெறும். இவ்விதை கடினப்படுத்துதல் நேர்த்தி மூலம் சீரான முளைப்புத் திறனை யும், வளர்ச்சியையும் இளம் நாற்றுக்கள் பெறுவதோடு வீரிய நாற்றுகளாக உருவெடுக்கும். |

தோட்டக்கலைபயிர் குறிப்பிட்ட ஆலோசனை

| **தோட்டக்கலை பயிர்** | **ஆலோசனை:** |
|---|---|
| மிளகாய் | தற்பொழுது நிலவி வரும் பருவ சூழ்நிலை மிளகாயில் நாற்றழுகல் நோய் வர ஏதுவாக உள்ளது. நோயுற்ற நாற்றுக்கள் பழுப்பு நிறமாகவோ, வெளுத்தோ காணப்படும். தண்டின் அடிப்பகுதி அழுகி விடும். நாற்றங்காலில் நாற்றுக்கள் மடிந்து சொட்டை சொட்டையாக இருப்பதற்கு இந்த நோயே காரணமாகும். இளம் நாற்றுக்களில் நோய் தோன்றினால் தாமிரப் பூசணக் கொல்லி மருந்தை (1 கிராம்/ஒரு லிட்டர் தண்ணீர்) நாற்றங்கால் மண்ணில் ஊற்ற வேண்டும் |
| தென்னை | தென்னையில் காண்டாமிருக வண்டு பாதிப்பை தடுக்க நடுக்குருத்துப்பாகத்தில் (கொண்டை) மட்டை இடுக்குகளில் 3 அல்லது 4 அளவுள்ள அந்து உருண்டையை மணலால் மூடவும் இதனை 45 நாட்களுக்கு ஒரு முறை இளம் நாற்றகளுக்கு மட்டை இடுக்குகளில் வைக்கவும். ஒரு மண்பானையில் 5 லி நீருடன் 1 கி.கி ஆமணக்கு புண்ணாக்கு சேர்த்த கலவையை தோப்பினில் வைத்தும் கவர்ந்து அழிக்கலாம். |